குமரி மாவட்டத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

# மீனவர்கள் பெருமளவில் திரண்டு வரவேற்க வாரீர்!

## மீனவர் நல வாரியத் தலைவர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

குமரி, பிப். 24 -



கழக மீனவர் அணி செயலாளர் - தமிழ்நாடு மீனவர் நல வாரிய தலைவர் அ.ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நல வாரியத் தலைவருமான ஜோசப் ஸ்டா லின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது, திராவிட மாடல் நல்லாட்சியின் மூலம் ஒட்டு மொத்த தமிழகத்தின் வளர்ச்சியிலும் அசுர பாய்ச்சல் நிகழ்த்தியிருக்கும் கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் குமரி மாவட்ட த்திற்கு வரும் 24 மற்றும் 25 ஆம் தேதிகளில் வருகை தர உள்ளார்.

ஏற்கனவே கழகத் தலைவரின் பொற்கால ஆட்சியில் குமரி மாவட்டத்தில் மீன்வளத் துறைக்கு 1000 கோடி ரூபாய்க்கும் அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டு திட்டங்களாக வந்துள்ளன. மீனவ கிராமங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்துக் வகையில் தூண்டில் வளைவுகள், கடலரிப்பு தடுப்புச் சுவர், பேரிடர் கால தொலைதொடர்பு கருவிகள் போன்றவற்றிற்கு அதிக நிதி கழக ஆட்சியில் ஒதுக்கப்பட்டு, மீனவர்களின் பாதுகாப்பான வாழ்வியல் உத்தரவாதப்படுத்தப் பட்டு உள்ளது. இதேபோல் மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்கியது, மீன்பிடி குறைகால நிவாரணத் தொகையை உயர்த்தியது என ஏராளமான மீனவர் நலன் நாடும் திட்டங்க ளைத் தந்தவர் நம் முதல்வர் அவர்கள். அந்தவகையில் கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் இப்போது குமரி மாவட்டத்திற்கு வரும்போதும் வாணியக்குடி மீனவ கிராமத்தில், புதிய மீன்பிடித் துறைமுகம் கட்ட முதல்கட்டமாக 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து பணிகளை துவக்கி வைக்க உள்ளார். இதேபோல், குளச்சல் துறைமுக விரிவாக்கப் பணிகளுக்கு முதல்கட்டமாக 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகளையும் தொடக்கி வைக்க உள்ளார்.

குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மீனவர்கள் 350 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது உட்பட ஏராளமான மீனவர் நலன் நாடும் திட்டங்களை குமரிமாவட்ட மீனவ மக்களுக்கு தந்து, அவற்றைத் தொடக்கி வைக்க வருகை தரும் கழகத் தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்துகொள்ளும் இந்த அரசு நிகழ்ச்சிகளில் கழக மீனவர் அணி நிர்வாகிகள், மீனவர் நலவாரிய உறுப்பினர்கள், மீனவ மக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பெருந்திரளாகக் கலந்துகொள்ள வேண்டும்."இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

அதிர்ச்சியில் அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி;

# திருச்சி மாநாட்டில் 10 லட்சம் பேரை திரட்ட தி.மு.க. திட்டம்!

## எதிர்க்கட்சிகளுக்கு பிரமிப்பே மிச்சம்! 'தினகரன்' தலையங்கத்தில் கருத்து!

சென்னை, பிப். 24 –

நடைபெற உள்ள திருச்சி மாநாட்டில் தி.மு.க. சார்பில் 10 லட்சம் பேர் திரள உள்ளனர் என்பதை கேள்விப் பட்ட அ.தி.மு.க. – பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அதிர்ச்சியிலும் பிரமிப்பிலும் உள்ளன என 'தினகரன்' நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:

மாநாடு என்றாலே தி.மு.க.விற்கு அல்வா சாப்பிடுவது போல, அதற்கான திட்ட மிடலும், தொண்டர்களை அழைத்து வருவதிலும் தி.மு.க. நிர்வாகிகளை யாரும் அடித்துக் கொள்ள முடியாது. அந்த அடிப்படையில் கடந்த 2 மாதங்களில் 7 மாநாடுகளை நடத்தி தி.மு.க. சாதனை படைத்துள்ளது. திருவண்ணா மலையில் இளைஞர்கள் மாநாடு, திருப்.ரில் மகளிர் மாநாடு, விருதுநகரில் இளைஞர்கள் மாநாடு, தஞ்சையில் மகளிர் மாநாடு, டெல்டா மண்டல மாநாடு, காஞ்சிபுரம், மதுரை என கடந்த 2 மாதங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் 9 லட்சத்து 80 ஆயிரம் பேரை சந்தித்து, அவர்கள் மத்தியில் பேசியுள்ளார். லட்சக்கணக்கில் தொண்டர்கள் திரண்டும், இவை அனைத்துமே வெறும் ட்ரெய்ஸர் தான் என்கிறது திமுக. வரும் 9ம் தேதி நடக்கும் திருச்சி மாநாட்டில் தமிழகம் முழுவதும் இருந்து 10 லட்சம் பேரை திரட்ட திமுக திட்ட மிட்டுள்ளது.



தினகரன்

பிப்ரவரி 23, 2026 திங்கட்கிழமை

வெற்றியே லட்சியம்

மாநாடு என்றாலே திமுகவிற்கு அல்வா சாப்பிடுவது போல. அதற்கான திட்டமிடலும், தொண்டர்களை அழைத்து வருவதிலும் திமுக நிர்வாகிகளை யாரும் அடித்துக் கொள்ள முடியாது. அந்த அடிப்படையில் கடந்த 2 மாதங்களில் 7 மாநாடுகளை நடத்தி திமுக சாதனை படைத்துள்ளது. திருவண்ணாமலையில் இளைஞர்கள் மாநாடு, திருப்பூரில் மகளிர் மாநாடு, விருதுநகரில் இளைஞர்கள் மாநாடு, தஞ்சையில் மகளிர் மாநாடு, டெல்டா மண்டல மாநாடு, காஞ்சிபுரம், மதுரை என கடந்த 2 மாதங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் 9 லட்சத்து 80 ஆயிரம் பேரை சந்தித்து, அவர்கள் மத்தியில் பேசியுள்ளார். லட்சக்கணக்கில் தொண்...

தி.மு.க.வின் மாநாடுகளையும், அதற்கு வரும் கூட்டங்களையும் பார்க்கும்போது, தேசிய ஜனநாயக கூட்டணியினருக்கு தேர்தலில் வெற்றி குறித்த சந் தேகம் வருகிறது. பொதுவாகவே தேர்தலுக்கு தேர்தல் ஆளும் கட்சியினருக்கு ஏதாவது ஒரு வகை யில் மக்கள் மத்தியில் அதிருப்தி காணப்படும். ஆளும்கட்சி நிர்வாகிகள் கூட்டங்கள் நடத்தும் போதும், மாநாடு நடத்தும் போது பொதுமக்கள் தங்கள் அதிருப்தியை அதில் வெளிப்படுத்துவர், கூட்டமும் குறைவாக காணப்படும். ஆனால் 5 ஆண்டுகளாகியும் தி.மு.க.விற்கு அலைகடலாய் கூடு கிற கூட்டத்தை பார்க்கும்போது, எதிர்கட்சிகளுக்கு பிரமிப்பே மிஞ்சுகிறது. மதுரையில் தென் மண்டல தி.மு.க. பாக முகவர்கள் மாநாட்டிற்கு வந்த கூட் டத்தை பார்க்கும்போது, பிரதமர் மோடிக்கு இவ்வளவு கூட்டத்தை நம்மால் மதுரையில் கூட்ட முடி யுமா என பா.ஜ.வினர் மூக்கில் விரல் வைத்துள்ளனர்.

திமுக மாநாடுகளுக்கு கூடும் கூட்டத்தை பார்க்கும்போது, மக்கள் நலத் திட்டங்களுக்கு கிடைத்த வரவேற்பே காரணம் எனலாம். மகளிர் உரிமை தொகையும், இலவச பஸ் பயணமும் தி.மு.க. எங்கு மாநாடு போட்டாலும், அங்கு மகளிரின் பங்களிப்பு உறுதி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் இன்று பெண்களின் சேமிப்பு உயர தொடங்கியதில் திராவிட மாடல் அரசின் பங்களிப்பு அதிகமுள்ளது. மகளிருக்கும், சுயஉதவி குழுக்களுக்கும் இந்த அரசு தீட்டியுள்ள திட்டங்கள் கணக்கிலடங்காதது. தமிழ்நாட்டின் உரிமைகளை பறிக்க ஒன்றிய அரசு போடும் திட்டங்களை எல்லாம் திமுக, தூள், தூளாக்கி வருவது இளைஞர்கள் மத்தியிலும் எழுச்சியை உருவாக்கி வருகிறது. இந்திய அள வில் ஒன்றிய அரசை எதிர்த்து உரிமைக்கு குரல் கொடுக்கும் இயக்கங்களில் திமுக முன்னிற்பதால், இங்குள்ள அமைச்சர்கள் மீது வலிந்து வழக்குகள் திணிக்கப்படுகின்றன. எமர்ஜென்சியையே எதிர் கொண்ட இயக்கம் தி.மு.க. என்பதை, பா.ஜ. பல சமயங்களில் மறந்து விடுகிறது.


திராவிட மாடல் ஆட்சியின் புதுமையான, முன்னோடியான திட்டங்களை கண்டு இன்று மற்ற மாநிலங்களும் அதை பின்பற்ற தொடங்கியுள்ளன. இதன் காரணமாக தமிழகம் இன்று 11.19 சதவீதம் என இரட்டை இலக்க வளர்ச்சியை எட்ட தொடங் கியுள்ளது. தி.மு.க.வின் இப்போதைய எழுச்சியை காணும் போதும், தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியினருக்கு மொத்தம் 30 தொகுதிக ளாவது தேறுமா என்ற அச்சமே மேலோங்குகிறது. அந்தளவுக்கு வெற்றியே லட்சியம் என்ற நோக்கில் திமுக தொண்டர்களும் களமாடுகின்றனர். நேற்று வரை தி.மு.க. கூட்டணியில் பிரச்சினை என எதிர்கட் சிகள் நாள் தோறும் புரூடா விட்டுக் கொண்டிருந்தன. இப்போது தி.மு.க. முதல் ஆளாய் கூட்டணிக் கட்சிகளை அழைத்து, தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தையை தொடங்கியிருப்பதால், அ.தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அசந்து நிற்கின்றன.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு கருத்து தெரிவித்துள்ளது.

---

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசரச் செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் – செஞ்சி கே.எஸ்,மஸ்தான் எம்,எல்,ஏ, அறிக்கை!



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப.சேகர் தலைமையில் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர்கள் செஞ்சி கார்த்திகேயன், மயிலம் இள.புகழேந்தி, திண்டிவனம் ஜாஃபர் அலி ஆகியோர் முன்னிலையில் இன்று (24.02.2026 – செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணி அளவில் செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள தமிழ் திருமகள் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:– 1. 23.02.2026 இன்று முதல்வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரை பிரச்சாரம் மேற்கொள்வது சம்பந்தமாக. 2. மார்ச் 1 ல், கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது சம்பந்தமாக. 3. மார்ச் 9 ஆம் தேதி திருச்சியில் நடைபெறும் மாநில மாநாடு சம்பந்தமாக,

4. கழக ஆக்கப் பணிகள் சம்மந்தமாக.

**செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ.,**
பொறுப்பாளர் – விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கே.பி. கணேசன்

### பிப்ரவரி 24 (2017)



கழகம் தொடங்கிய காலம் முதல் 1997ஆம் ஆண்டு வரை தொடர்ந்து வீரபாண்டி ஒன்றியக் கழகச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – தலைமை செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து அப்பகுதியில் கழக வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

எஸ்.பாப்பாரப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர், வீரபாண்டி ஒன்றிய துணைப் பெருந்தலைவர், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர், சேலம் மாவட்ட நிலவள வங்கி துணை தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


---

சாதனை படைத்த 'திராவிட மாடல் தி.மு.க. ஆட்சி' மீண்டும் மலர பாடுபடுவோம்!

# தி.மு.க. கூட்டணி வெற்றி பெற, வாக்காளப் பெருமக்களே ஆதரவு தாரீர்!

## தஞ்சை திராவிட மாணவர் கழக, இளைஞரணி மாநில மாநாட்டில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி முன்மொழிந்த தீர்மானம்!

தஞ்சாவூர், பிப்.24-



நல்லாட்சி என்பதற்கு அடையாளமாக மக்கள் வளர்ச்சிப் பணிகளில் சாதனை சரித்திரம் படைத்த - 'திராவிட மாடல்' அரசான தி.மு.க. ஆட்சி மீண்டும் மலர்ந்திட, பாடுபடுவது என்றும், தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கும் மக்கள் பெருவாரியான வாக்களித்து வெற்றி பெற பாடுபடவேண்டும் என்றும், தஞ்சாவூர் திலகர் திடலில் நேற்று முன்தினம் (21.2.2026) மாலை நடைபெற்ற திராவிட மாணவர் கழகம், இளைஞரணி மாநில மாநாட்டில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் வருமாறு:

"சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்லுவோம்" என்ற அறிவு நாணயத்தோடு செயல்பட்டு வருவது - 'திராவிட மாடல்' அரசான சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மானமிகு மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு ஆட்சியே யாகும்.

பொருளாதார வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்பு, பெண்களின் மறுமலர்ச்சிக்கான பல்வேறு அடுக்கடுக்கான திட்டங்கள் - குறிப்பாக, சிறப்பாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணத் திட்டம் என்ற பெயரில், பெண்களுக்கு இலவசப் பேருந்து பயணம், புதுமைப் பெண் திட்டம், பள்ளிகளில் காலைச் சிற்றுண்டித் திட்டம், மாணவர்களுக்குத் தவப்புதல்வன் திட்டம், 'தோழி' மகளிர் விடுதி என்ற அடுக்கடுக்கான திட்டங்கள்மூலம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டு 'திராவிட மாடல்' அரசு வீரியத்துடன் செயல்பட்டுவருகிறது.

மருத்துவத் துறையிலும் தலைசிறந்த மாநிலமாகத் திகழ்கிறது. புதிய மருத்துவக் கல்லூரிகள், மக்களைத் தேடி மருத்துவம், உலக முதலீட்டாளர் மாநாடு, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு, தொழில் உதவி, வேளாண் துறையில் பாசனத் திட்டங்கள், சாலை மற்றும் போக்குவரத்து, சென்னை மெட்ரோ "சிங்கார சென்னை 2.0" திட்டம், குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்கள், சமூகநீதி, மதச்சார்பின்மைக் கொள்கையில் பெரும்பாய்ச்சல், "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் என்று பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

உள்நாட்டுத் தொழில் வளர்ச்சி (GDP), முதலீடு ஈர்ப்பு, மனித வள மேம்பாடு இவற்றில் முன்னிலை வகிக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு ஒளிவீசுகிறது.

வளர்ந்த நாடுகளில் ஒற்றை இலக்கத்தில் மட்டுமே விவசாயிகள் வளர்ச்சி உள்ள நிலையில், தமிழ்நாட்டில் 25 விழுக்காடு வேளாண்மையில் ஈடுபட்டு வருவதாக 2025-2026 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை கூறுகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.9 விழுக்காடு என்பது - இந்தியாவின் சராசரி வளர்ச்சி விகிதத்தில் இரு மடங்கு என்பது பெரும் வியக்கத்தக்க சாதனையாகும்.

தமிழ்நாட்டின் உற்பத்தித் தொழில் துறை 14.74 விழுக்காடு என்பது இந்திய சராசரியைவிட மும்மடங்கு அதிகம் என்பது அசாதாரண சாதனை யாகும்.

'திராவிட மாடல்' ஆட்சியில் தொழிலாளர் பங்கேற்பு 72.1 விழுக்காடாக உயர்ந்துள்ளதால், வேலையின்மை 3.5 விழுக்காடாகக் குறைந்துள்ளது. இந்தியாவில் பணிக்குச் செல்லும் பெண்களின் சராசரி 33.7 விழுக்காடாகும்; தமிழ்நாட்டில் 'திராவிட மாடல்' ஆட்சியிலோ 44 விழுக்காடாகும்.

தமிழ்நாட்டில் வணிகப் பொருள் ஏற்றுமதி இரட்டிப்பாகி உள்ளது. மின்னணுவியல், ஜவுளி மற்றும் தோல் ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

தமிழ்நாட்டின் வளர்ச்சி இந்திய அளவில் முதன்மை இடத்தில் பல்துறைகளிலும் ஒளிர்கிறது என்ற தகவலை ஒன்றிய அரசே புள்ளி விவரங்களுடன் வெளியிட்டுள்ளது என்றால், தி.மு.க. தலைமையிலான 'திராவிட மாடல்' அரசின் சாதனை எவரும் எட்ட முடியாத முகட்டில் நிலை பெற்றிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

ஆணவப் படுகொலையைத் தடுப்பதற்கான சட்டம் இயற்ற நீதிபதி தலைமையில் ஆணையம், வீதிகளுக்கும், சாலைகளுக்கும் சூட்டப்பட்டுள்ள ஜாதிப் பெயர் நீக்கம், காலனிப் பெயர் நீக்கம் போன்றவை தி.மு.க. அரசின் முற்போக்குச் சிந்தனைகளுக்கான அடையாளங்களாகும்.

சித்தாந்த ரீதியாக ஆர்.எஸ்.எஸ்., சங் பரிவார்கள், பி.ஜே.பி.யை நேரிடையாக எதிர்க்கக் கூடிய கொள்கையைக் கொண்டதும், 'திராவிட மாடல்' ஆட்சியே! ஒன்றிய பி.ஜே.பி. அரசுக்கு சித்தாந்த ரீதியாகவும் எதிர் நிலை எடுக்கக் கூடியது 'திராவிட மாடல்' ஆட்சியே!

பண்பாட்டு மீட்சியின் அடிப்படையில், தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் போன்ற ஆளுமைகளின் பிறந்த நாளை அரசு ரீதியாக முன்னுரிமை அளித்தும், தந்தை பெரியார் படைப்புகளை உலக மொழிகளில் கொண்டுவரும் முற்போக்கு முயற்சியிலும் 'திராவிட மாடல்' அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

ஒன்றிய அரசு பல வகைகளிலும் தமிழ்நாட்டை புறக்கணித்தாலும், முறைப்படி தரவேண்டிய நிதியைத் தர மறுத்தாலும், முட்டுக்கட்டைப் போட்டாலும் அதையும் கடந்து இந்தியாவில் முதல் வளர்ச்சி மாநிலமாக ஒளிவீசுவது தமிழ்நாடு 'திராவிட மாடல்' அரசின் மகத்தான சாதனை சரித்திரமாகும்.

ஹிந்தித் திணிப்பு உள்ளிட்ட அம்சங்களை உள்ளடக்கிய தேசிய கல்வித் திட்டத்தை எதிர்ப்பதால், கல்விக்கான மானியத்தை ஒன்றிய அரசு மறுத்து வருகிறது. ஆனாலும், கொள்கையே பெரிது என்ற நிலையில், அதனைப் புறந்தள்ளி, தமிழ் மண்ணுக்கான தனித்தன்மையான கொள்கை களில் பலமாகக் காலூன்றி, வீறுநடை போட்டு வருகிறது. பொருளாதாரத்தில் நலிந்த உயர்ஜாதியினருக்கு 10 விழுக்காடுக்கு வழிவகுக்கும் 103 ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை ஒன்றிய பி.ஜே.பி. அரசு நிறைவேற்றினாலும், சமூகநீதிக் கொள்கைக்கு அது எதிரானது. ஆகையால், அதனைத் தமிழ்நாடு 'திராவிட மாடல்' அரசு செயல்படுத்த மறுத்துவிட்டது.

மக்கள் நல ஆட்சி (Welfare State) என்பதற்கு முழு முதல் இலக்கணமாக செயல்பட்டுவரும் தி.மு.க. தலைமையிலான இந்தத் 'திராவிட மாடல்' ஆட்சியே 2026 இல் நடைபெறவிருக்கும் சட்டப் பேரவைத் தேர்தலிலும் வெற்றி பெற்று, மீண்டும் ஆட்சி அமைக்கும் வகையில், இதுவரை எந்தக் கட்சி ஆட்சியும் பெற்றிராத பெரும்பான்மையை எட்டும் வகையில், தி.மு.க.வுக்கும், அதன் தோழமைக் கூட்டணிக் கட்சிகளுக்கும் மகத்தான வெற்றியைத் தேடித் தருமாறு தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்களை திராவிடர் கழக மாநாடு கேட்டுக் கொள்கிறது - வலியுறுத்துகிறது. கூட்டணிக் கட்சிகளும் ஒன்றுபட்டு செயல்படவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறது.

தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள் பெருமளவு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற, கடுமையாக எல்லா வகையிலும் திராவிடர் கழகம் பாடுபடுவது என்று இம்மாநாடு தீர்மானித்துப் பிரகடனப்படுத்துகிறது.

மாநாட்டில் திரண்டிருந்த அனைவரும் எழுந்து நின்று கரவொலி எழுப்பி தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

---



சிவகங்கை மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் முதலமைச்சர் தளபதி மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு1001 கிரிக்கெட் அணிகளுக்கு விளையாட்டு உபகரணங்களை மாவட்டகழக செயலாளர், அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,, மாநில செய்தி தொடர்பு துணைத் தலைவர் மருது அழகுராஜ் , மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ். நாராயணன்,பேரு ராட்சி மன்றத் தலைவர் திருமதி கோகிலா ராணி நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

### தி.மு.க. மகளிர் அணி

## நாமக்கல் மேற்கு மாவட்ட சமூக வலைதளப் பொறுப்பாளர்கள் நியமனம்

### தி.மு.க மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு

நாமக்கல் மேற்கு மாவட்ட மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட வசந்தா அவர்கள் மறைவெய்தியதால், அவருக்கு பதிவாக திருமதி **எஸ். வசந்தா** (4/27ஏ2 கவலோந்தி மரத்தோட்டம் கலியனூர் அஞ்சல், குமாரபாளையம் வட்டம் நாமக்கல் மாவட்டம்

ஏற்கனவே நியமிக்கப்பட்ட பரிமளாதேவி அவருக்கு பதிலாக, திருமதி **எஸ்.மோகனா** (1/13, பிலிக்கல்பாளையம், பரமத்திவேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் 637213) ஆகியோர் நாமக்கல் மேற்கு மாவட்ட மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| **"அண்ணா அறிவாலயம்"** | **ஜெ. ஹெலன்டேவிட்சன்,** |
| சென்னை - 600018 | செயலாளர் |
| நாள்- 22.2.2026 | தி.மு.க. மகளிர் அணி |



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு மத்திய ஒன்றியம் ஒதியத்தூர் கிராமத்தில் கட்டப்பட்டுள்ள புதிய மேம்பாலத்தை தெற்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் பி.வெங்கடேசன், குமாரபாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.